செ.வெ.எண்: 806/2016 நாள்: 17.11.2016

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தலைமையில் இன்று (17.11.2016) நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் 35 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தடிக்காரன்கோணம் சமுதாய நலக்கூடத்தில் இன்று (17.11.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

19.10.2016 அன்று நடைபெற்ற முதற்கட்ட முகாமில் 120 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இதில் 41 தகுதியான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த மனுக்கள் மீதான பதில்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் முன்னிலையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொது மக்களுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

தமிழக அரசு வெகு விரைவில் சுமாட் கார்டு மூலம் (Smart card) குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. எனவே இதுவரை நியாயவிலை கடையில் ஆதார் எண்ணை இணைக்காதவர்கள் உடனடியாக ஆதார் எண்ணை பதிவு செய்ய வேண்டும் எனவும், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை ஒப்பிட்டு பார்க்கும்போது குறைந்துள்ளதால், விவசாயம் பாதிக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அனைவரும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, வருவாய்த்துறை சமூகபாதுகாப்பு திட்டத்தின்கீழ், 12 பயனாளிகளுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகையும், 3 பயனாளிகளுக்கு இந்திராகாந்தி தேசிய விதவை உதவி தொகையும், 4 பயனாளிகளுக்கு ஊனமுற்ற உதவி தொகையும், 1 பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்டோருக்கான உதவி தொகையும், 5 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகை என மொத்தம் 25 பயனாளிகளுக்கு மாதந்தோறும் தலா ரூ.1000/- பெறுவதற்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் வழங்கினார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, சுகாதார துறை மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் ஆகிய துறைகளின் மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும் சுகாதாரத்துறை, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை மூலம் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், சமூக பாதுகாப்புத்திட்டம் தனி துணை ஆட்சியர் திரு.சந்திரன், தோவாளை வட்டாட்சியர் திருமதி. முத்துலெட்சுமி, தோவாளை தனி வட்டாட்சியர் திருமதி. சாரதாமணி, தோவாளை வட்ட வழங்கல் அலுவலர் திரு. ஜாண் அலெக்சாண்டர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.